# யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் - ஓர் ஒப்பீட்டாய்வு

சிவராசா ஓசாநிதி,
*உதவி விரிவுரையாளர்.*
*மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வு அறிமுகம்:**

தொல்காப்பியத்திற்குப் பின்னர் முழுவடிவில் முதன்முதலில் யாப்புக்கென எழுந்த யாப்பிலக்கணநூல் யாப்பருங்கலம் ஆகும். இந்நூலின் ஆசிரியர் அமிர்தசாகரர் என்பதை யாப்பருங்கலப் பாயிரம் “அளப்பரும் கடற்பெயர் அருந்தவத்தோன்” எனக் கூறுகிறது.இங்கு அளப்பரும் கடற்பெயர் என்பதற்கு அரிய கடலினது பெயரினை உடைய அரிய தவத்தினை உடையவர் அமிர்தசாகரர் என்பதையே சுட்டுகின்றது. இவர் ஒரு சமணர் என்றும், சமணர்களுள்ளும் அருங்கலான் வயம் என்னும் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் யாப்பருங்கலச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.“வெறிகமழ் தாமரை மீமிசை ஒதுங்கியஅறிவணை வணங்கி அறைகுவன் யாப்பே” (யாக்கருங்கலம்: சிறப்புப் பாயிரம்)

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களை உடையது. முதலாவது இயலான உறுப்பியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி,தொடை ஆகிய செய்யுளின் உறுப்புக்களும், இரண்டாவது இயலான செய்யுளியலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும்,அவற்றின் இனங்களும் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது இயலான ஒழிபியலில் மூன்று நூற்பாக்கள் உள்ளன. அவை முறையே தனிச்சொல், புறநடை, சித்திரக்கவி என்பவற்றைக் கூறுகின்றன. பாயிரம் கடவுள் வணக்கம் நீங்கலாக,யாப்பருங்கலத்தின் மொத்த நூற்பாக்கள் தொண்ணூற்றாறு ஆகும். அவற்றின் மொத்த அடிகள் இருநூற்று இருபத்திரண்டு ஆகும். அனைத்தும் அளவடிகள், தனிச்சொல் ஒன்றுரேனும் இல்லாத அகவல் அடிகளால் அமைந்த நூற்பாக்களாகும்.

யாப்பருங்கலத்திற்கு பழங்காலத்தில் தோன்றிய உரை விருத்தியுரை என அழைக்கப்படுகிறது. காரிகை உரை குணசாகரரே விருத்தியுரையாசிரியர் என்றும் கூறப்படுகிறது. யாப்பருங்கலத்தைப் போற்றிப் புகழ்கின்ற வெண்பா ஒன்று இந்நூலின் இறுதியில் உள்ளது. இந்நூல் சொல்லால் சுருங்கியது, பொருளால் பெருகியது, தொல்ஞானம் எல்லாம் விளங்குவது, அறியாமை இருளை அகற்றுவது. இத்தகைய சிறப்புடைய யாப்பு நூலைக் கற்க வல்லவர் கேள்விச் செல்வம் அனைத்தையும் உணர்ந்து ஒருங்கு அறியவல்லவர்.

யாப்பருங்கலக்காரிகை என்னும் யாப்பருங்காரிகை என்னும் நூல் யாப்பருங்கலத்தை அடுத்துத் தோன்றிய இலக்கண நூலாகும். ‘காரிகை’ என்பது ‘பெண்’ என்னும் பொருளைத் தருவது. பெண்ணை முன்னிலைப்படுத்தி செய்யுட்கள் அமைந்திருப்பதாலும், இலக்கணம் கூறும் கட்டளைக் கலித்துறைப் பாடல்களை குறிப்பதாலும் இந்நூல் காரிகை என அழைக்கப்படுகிறது.

யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் அமிர்தசாகரர். இவர் யாப்பருங்கலத்தை இயற்றிய பின்னரே யாப்பருங்கலக் காரிகை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. யாப்பருங்கலக் காரிகைக்கு பழங்காலத்தில் காண்டிகையுரை தோன்றியுள்ளது. இதன் உரையாசிரியர் குணசாகரர் என்பது குறிப்பிடத்தக்கது. யாப்பருங்கலக் காரிகைஉறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களை உடையது. மூவியல்களும் முறையே இருபது, பதினைந்து,

ஒன்பது ஆக நாற்பத்து நான்கு காரிகைகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும், நிரையசை முதலாகிய காரிகை இருபத்து மூன்றும் ஆகும்.

யாப்பருங்கலக் காரிகையுரை மிகவும் தெளிவும், எளிமையும் உடையது. கற்போர் நினைவில் என்றும் நிலைத்து நிற்கவல்ல பல சிறந்த மேற்கோட் பாடல்களைக் கொண்டது. தெளிவான யாப்பிலக்கணக் கொள்கையை உணர்த்துவது. இவ்வுரை முழுவதும் உயிரோட்டமுள்ள நடையைக் காணமுடிகின்றது. இந்நூலின் தற்கால விளக்கங்கள் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை என்பவரது உரையை அடியொட்டியே அமைகின்றன.

இவ்விரண்டு இலக்கண நூல்களும் ஒரே ஆசிரியர்களால் இயற்றப்பட்டுள்ள போதிலும் இவற்றுக்கிடையயே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அமைப்பு, அசை,சீர்,தளை, அடி, தொடை,யாப்புக்கள்(பாக்கள்),பாவினங்கள் (வெண்பா வகைகள், வெண்பாவின் வாய்பாடுகள்,மருட்பா இலக்கணம், ஒத்தாழிசைக் கலிப்பாவின் வரைவிலக்கணம்,ஈற்றின் விதி),சித்திரக் கவிகள்,மகடூஉ முன்னிலை பற்றிய குறிப்பு, எடுத்துக்காட்டுக்கள் என்பவற்றில் இரண்டு நூல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளை இரண்டு நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்வதோடு இவற்றிக்கான காரணங்களையும் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது.

**யாப்பருங்கத்திற்கும் யாப்பருங்காரிகைக்கும் இடையிலான வேறுபாடுகள்**

**அமைப்பு**

யாப்பருங்கலம் நூற்பாக்களால் அமையப்பெற்றுள்ளது. ஆனால் யாப்பருங்கலக் காரிகை கட்டளைக் கலித்துறைகளால் அமைந்துள்ளது. யாப்பருங்கலத்தில் அவையடக்கம் இல்லை. யாப்பருங்கலக் காரிகையில் அவையடக்கம் உண்டு.

“தேனார் கமழ் தொங்கள் மீனவன் கேட்பத் தெண்ணீரருவிக்

கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்

யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்

ஆனா விறிவி னவர்க்கென் னாங்கொலென் னாதரமே”

அதாவது காரிகைக்கு முன்பே இலக்கண நூலாக அகத்தியம் விளங்குகின்றது என்று அகத்தியத்தின் பெருமையையும், பின்பு கற்போர்க்கு விளங்கக்கூடிய வகையில் இந்நூலை ஆசிரியர் இயற்றினார் என்றும், ஆசிரியர் தமது சிறுமை தோன்றக் கூறும்வேளையில் அவையடக்கம் தோன்றலாயிற்று.

யாப்பருங்கலப்பாயிரத்தில் ஆசிரியர் பெயர்அமிர்தசாகரர் என்றும்ஆசிரியர்க்கு ஆசிரியர் பெயர்குணசாகரர்என்றும் கூறப்பட்டுள்ளது.இதனை பின்வரும் பாயிரச் செய்யுள் கூறுகின்றது.

“குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழா அத்

துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி

யளப்பருங் கடற்பெயருவந்தவத் தோனே”(பாயிரம்)

இங்கு ‘குணகடற் பெயரோன்’ என்பது குணசாகரரையும் ‘அருந்தவத்தோன்’ என்பது அமிர்தசாகரரையும் குறிக்கின்றது. ஆனால் யாப்பருங்கலக் காரிகையில் நூலின் ஆசிரியர் பற்றியோ, அவரின் ஆசிரியர் பற்றியோ கூறப்படவில்லை.

யாப்பருங்கலத்தில் இயலின் உட்பிரிவாக ஓத்து என்னும் சிறு பிரிவு உண்டு. யாப்பருங்கல உறுப்பியலில் எழுத்தோத்து, சீரோத்து, தளையோத்து, அடியோத்து, தொடையோத்து என்னும் ஆறு ஓத்துக்கள் உள்ளன. ஆனால் யாப்பருங்கலக் காரிகையில் உட்பிரிவுகள் இல்லை.

நூலில் கூறப்பட்டுள்ள பொருளும், தொகையும் யாப்பருங்கலத்தில் கூறப்படவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் கூறப்பட்டுள்ளது. அதாவது எழுத்துக்கள் பதின்மூன்று, அசைகள் இரண்டு, சீர்கள் முப்பது, தளைகள் ஏழு, அடிகள் ஐந்து, தொடைகள் நாற்பத்துமூன்று, பாக்கள் ஐந்து, பாவினங்கள் மூன்று, வண்ணங்கள் நூறு, பொருள்கோள்கள் ஒன்பது, விகாரங்கள் ஆறு, வனப்புக்கள் எட்டு என காரிகையில் கூறப்பட்டுள்ளது.

“எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையந்

திமுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவின மூன

றொழுக்கிய வண்ணங்க னூறொன்ப தொண்பொருள் கோளிருமூ

வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே”(காரிகை:44)

இவ்வாறு அமைப்புரீதியில் இரண்டு நூல்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது.

**அசை**

யாப்பருங்கலம் அசைக்கு உறுப்பு பதினைந்து எனக் கூறுகிறன்றது. அவையாவன உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், அளபெடை, வன்மை, மென்மை, இடைமை, சார்பில் தோன்றும் இயற்கை மூன்று, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்பனவாகும். இதனை பின்வரும் நூற்பா கூறுகிறது.

“உயிரே மெய்யே யுயிர்மெய் யென்றா

குறிலே நெடிலே யளடிபடை யென்றா

வன்மை மென்மை தன்மைய யென்றா

சார்பிற் றோன்றுந் தன்மைய யென்றா

ஐ ஔ மகரக் குறுக்க மென்றாங்

கைம்மூ வெழுத்து மாமசைக் குறுப்பே” (யாப்பருங்கலம்: நூற்பா:2)

யாப்பருங்கலக் காரிகையில் குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஆய்த எழுத்து, மெய்யெழுத்து, வல்லினம், மெல்லினம், இடையெழுத்து, உயிர்மெய், அளபெடை என்னும் பதின்மூன்று உறுப்புக்கள் அசையின் உறுப்புக்களாகக் கூறப்பட்டுள்ளன. ஔகார மற்றும் மகரக்குறுக்கங்கள் ஆகிய இரண்டையும் காரிகை குறிப்பிடவில்லை. இதனை பின்வரும் கட்டளைக் கலிப்பாமூலம் அறியலாம்.

“குறினெடி லாவி குறிவிய மூவுயி ராய்ரமெய்யே

மறவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்

சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்

அறிஞ ருரைத்த வளவு மசைக்குறுப் பாவனவே"(காரிகை: 4)

**சீர், தளை, அடி, தொடை**

கழிநெடிலடி என்பது அறுசீர் முதலாகப் பத்துச்சீர் இறுதியாக வரும் என யாப்பருங்கலம் கூறுகிறது. யாப்பருங்கலக் காரிகை சீர்கள் ஐந்திற்கு மேற்பட்ட அடிகளெல்லாம் கழிநெடிலடி எனக் கூறுகிறது. முறையே இதனை பின்வரும் நூற்பாக்கள் கூறுகின்றன.

"கழிநெடி லடியே கசடறக் கிளப்பி

னறுசீர் முதலா வையிரண் டீறா

வருவன பிறவும் வகுத்தனர் கொளலே"(யாப்பருங்கலம்: நூற்பா: 25)

"கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே"(காரிகை: 12)

யாப்பருங்கலத்தில் ஒரு செய்யுளில் பல தொடையும் பல அடியும் வந்தால் வழங்கும் முறை கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு செய்யுளகத்துத் தொடை பல தொடுத்து வந்தாலும், தளை பல விரவி வந்தாலும் அவற்றை முதல் வந்த தொடையாலும் முதல் வந்த தளையாலும் பெயர் கூறப்படும். இதனை பின்வரும் நூற்பாமூலம் அறியலாம்.

"தொடை பல தொடுப்பினுந் தளைய விரவினும்

முதல்வந் ததனான் மொழிந்திசிற் பெயரே"(யாப்பருங்கலம்: நூற்பா: 53)

ஆனால் இது பற்றி யாப்பருங்கலக் காரிகையில் கூறப்படவில்லை.

**யாப்புக்கள்(பாக்கள்), பாவினங்கள்**

யாப்பருங்கலத்தில் சிந்தியல் வெண்பா வகைகள் குறிப்பிடப்படவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சிந்தியல் வெண்பா நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இருவகைப்படும். இதனை பின்வரும் நூற்பா சுட்டுகிறது.

"நேரிசை யின்னிசை போல நடந்தடி

மூன்றின் வந்தால்

நேரிசை யின்னிசைச் சிந்திய

லாகு நிகரில் வெள்ளை"(காரிகை: 24)

காசு, பிறப்பு என்னும் வெண்பா வாய்பாடுகள் யாப்பருங்கலத்தில் சுட்டப்படவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் சுட்டப்பட்டுள்ளது. நாள், மலர் என்னும் ஓரசைச்சீர் வாய்பாடுகளும்; காசு, பிறப்பு என்னும் குற்றுகர

வாய்பாடுகளுமாகிய நான்கினுள் ஒன்றில் முடிந்த இறுதிச் சீரினையுடைய சிந்தடிதானே வெண்பாவுக்கெல்லாம் இறுதியாய் வரும். இதனை யாப்பருங்கலக் காரிகை பின்வருமாறு சுட்டுகிறது.

“ஓரசைச்சீரும் ஒளிசேர்

பிறப்புமொண் காசுமிற்ற

சீருடைச் சிந்தடி யேமுடி

வாமென்று தேறுகவே”(காரிகை: 25)

மருட்பா இலக்கணம் யாப்பருங்கலத்தில் கூறப்படவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் கூறப்பட்டுள்ளது. புறநிலைவாழ்த்து, கைக்கிளை, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ என்பவற்றின்மீது வெண்பாவாய் முன்வந்து பின் அகவலாய் ஒரு செய்யுள் முடியுமாயின் அதனை மருட்பா எனப்படுகிறது. இதனை பின்வரும் காரிகை முன்வைத்துள்ளது.

“பண்பார் புறநிலை பாங்குடை கைக்கிளை வாயுறைவாழ்த்

தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா

வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விறையு மென்றால்

வண்பால் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே”(காரிகை: 35)

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பற்றி இருநூல்களும் வெவ்வேறு விதமாகக் கூறியுள்ளது. ஒன்றிற்கொன்று சுருங்கும் அம்போதரங்கள் ஒத்தாழிசைக் கலிப்பா என்று யாப்பருங்கலமும் நீரின் திரைபோலும் முறைபொருந்தி வருகின்ற அளவடியாகிய நாற்சீரடி, மூச்சீரடி, இருசீரடி என்னும் அம்போதரங்கள் நடுவிலே மடுக்கப்படுமாயின் அது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என்று யாப்பருங்கலக் காரிகையும் கூறியுள்ளன. அடிகள் ஒன்றுக்கொன்று சுருங்கும் அம்போதரங்களால் ஒத்தாழிசைக் கலிப்பா உருவாகிறது. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பற்றிச் சுருக்கமாக யாப்பருங்கலம் கூற யாப்பருங்கலக் காரிகை சீர்கள், அடிகள் பற்றிக்கூறி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பற்றி விரிவாகக் கூறியுள்ளது. இதனை முறையே பின்வரும் நூற்பாக்கள் முன்வைத்துள்ளன.

‘ஒன்றினுக் கொன்றுசுருங்கு முறுப்பின

தம்போதரங்க வொத் தாழிசைக்கலியே”(யாப்பருங்கலம்:நூற்பா: 83)

“நீர்திரைபோன் மரபொன்று நேரடி முச்சீர் குறள் நடுவே

மடுப்பின் அது அம்போதரங்கள் வொற்தாழிசைக்”(காரிகை: 30)

விதியும் விதிவிலக்கும் அவ்வவ்விடங்களிலேயே யாப்பருங்கலத்தில் கூறப்பட்டுள்ளது. யாப்பருங்கலக் காரிகையில் விதி உறுப்பியல், செய்யுளியல்களிலும் விலக்கு ஒழிபியலிலும் கூறப்பட்டுள்ளன. எனினும் அகவற்பாவின் ஈற்றுவிதி பற்றி யாப்பருங்கலத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் யாப்பருங்கலக் காரிகையில் அகவற்பாவின் ஈற்றுவிதி பற்றிக் கூறப்படவில்லை. அதாவது யாப்பருங்கலம் ‘ஏ, ஓ,ஈ,ஆய், என், ஐ’ என்னும் ஈறுகளை அகவலோசையை உடைய அகவற்பாவிற்கு (ஆசிரியப்பாவிற்கு) விதியாகக் கூறுகிறது.

"அகவலிசையன வகைவன் மற்றவை

ஏஓஈஆய்என்ஐ யென் றிறுவே"(யாப்பருங்கலம்:நூற்பா:69)

**சித்திரக் கவிகள், மகடூஉ முன்னிலை பற்றிய குறிப்பு**

மாலை மாற்று முதலிய சித்திரக் கவிகள் ஒழிபியலில் யாப்பருங்கலத்தில் உண்டு. யாப்பருங்கலக் காரிகையில் இல்லை.

"மாலை மாற்றே சக்கரஞ் சுழிகள

மேக பாத மெழுகூற் றிருக்கை

சாதை கரப்பே கரத்துறை பாட்டே"( யாப்பருங்கலம்:நூற்பா: 96)

மகடூஉ முன்னிலை யாப்பருங்கலத்தில் இல்லை. யாப்பருங்கலக் காரிகையில் உண்டு. தற்சிறப்புப் பாயிரத்தில் 'சந்தமடிய வடியான் மருட்டிய தாழ்குலலே' என்பது மகடூஉ முன்னிலையாகும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

யாப்பருங்கலத்தில் எடுத்துக்காட்டுக்கள் நுலாசிரியரால் பாடப்படவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் எடுத்துக்காட்டுக்கள் நுலாசிரியரால் பாடப்பட்டுள்ளது. சான்றாக ஐவகைச் சீர்களுக்கும் இலக்கணமும் அதன்பின் வாய்பாடும் கூறப்படும் என்பதை உதாரண முதற்குறிப்புமூலம் வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

"குன்றக் குறவ னகவல்பொன் னாரம்வெண் பாட்டுவஞ்சிக்

கொன்று முதாரணம் பூந்தா மனரயென்ப வோரசைச்சீர்

நன்றி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்

கற்றதென் னாரள்ளற் பள்ளத்தி னோடங்கண் வானத்துமே"(காரிகை: 09)

இவ்வாறு இரண்டு நூல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

ஆசிரியரால் முற்றுப்பெறுவித்த நூலாக யாப்பருங்கலமும், உரையாசிரியரும் பாடி முற்றுப்பெறுவித்த நூலாக யாப்பருங்கலக் காரிகையும் விளங்குகின்றது. காரிகையில் பாயிரம் தொடங்கி உறுப்பியலை இருபது காரிகையால் நூலாசிரியர் நிறைவு செய்துள்ளார். அவ்விருபது காரிகைகளையும் முறையே அடைவு செய்து 'கந்தமும் தேனும்' என்னும் காரிகையால் முதனினைப்பாக்கியுள்ளார் உரையாசிரியர். மேலும் ஆசிரியர் பாடாத பகுதிகளுக்கும் எடுத்துக்காட்டுக்களைப் பாடி நூலை முழுமை பெறச் செய்துள்ளார் உரையாசிரியர்.

யாப்பருங்கலக்கத்தின் புறநடையாக அதே ஆசிரியரால் முற்றுப்பெற்றது யாப்பருங்கலக் காரிகையாகும். புறநடை என்பது முதல்நூலிற்கு அங்கமாகக் செய்யப்படுவதாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரு யாப்பிலக்கண நூல்களுள் கற்போரால் பெரும்பாலும் கற்கப்படுவது யாப்பருங்கலக் காரிகையாகும். யாப்பருங்கலம் காக்கைப்பாடிணியத்தைப் பின்பற்றியது, தொல்காப்பியத்தின் வழி நூலன்று. அது நேரசை, நிரையசை வேண்டாது

காக்கைப்பாடிணியார்போல நாலசைச்சீர், பொதுச்சீர் வேண்டுவதனாலும் தாழிசை, துறை விருத்தங்களைத் தொல்காப்பியனார் முதலாயினோர் போலக் கொச்சக்கலிப்பாற்படுத்தாது பாவினங்களென வகுப்பதனாலும், பிறவற்றாலும் இனிது புலப்படும் நூலாகும். ஆனால் யாப்பருங்கலக் காரிகை யாப்பருங்கலத்தின் வழிபட்டது. யாப்பிற்கு நாலடி நாற்பதுபோல யாப்பங்கலமென்னும்யாப்பிற்கு அங்கமாய் அலங்காரமுடையதாய் யாப்பருங்கலக் காரிகை இயற்றப்பட்டுள்ளது.

எனவேதான் முதல்நூலில் காணப்படும் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாப்பருங்கலக் காரிகை இயற்றப்பட்டுள்ளதால் இவ்விரண்டு இலக்கண நூல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகிறன்றன. மேலும் யாப்பருங்கலம் கற்போருக்கு எளிமையானது. ஆனால் கற்போருக்கு மிகவும் எளிமையான முறையில் முதல் நூலில் இருந்து சிலவற்றை நீக்கியும் சிலவற்றை உள்வாங்கியும் காலத்தின் தேவைக்கேற்ப யாப்பருங்பலக் காரிகை இயற்றப்பட்டுள்ளதால் இவ்விரண்டு நூல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக அசையின் உறுப்புக்களில் ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம் என்பவற்றை யாப்பருங்கலம் கூறியுள்ளது. ஆனால் யாப்பருங்கலக் காரிகை இவ்விரண்டு குறுக்கங்களையும் கூறவில்லை. ஏனெனில் மகரக்குறுக்கம்(போன்ம்), ஔகாரக்குறுக்கம்(கௌதமி) ஆகிய இரண்டு குறுக்கங்களும் தற்பொழுது வழக்கில் அருகியே காணப்படுகின்றன. அதனிலும் மரக்குறுக்கம் தற்பொழுது பயன்படுத்துவதில்லை. ஆகவே இவ்விரண்டு இலக்கண நூல்களும் தத்தம் காலவழக்குகளைப் பின்பற்றியுள்ளதாலும் இவ்விரண்டு இலக்கண நூல்களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### உசாத்துணை நூல்கள்

[1] இளங்குமாரன், இரா., 1999,**இலக்கண வரலாறு**, மணிவாகர் பதிப்பகம், சென்னை.

[2] அமிர்தசாகரர், 1916,**யாப்பருங்கலம்**, லோன்மனஸ் கிறீன், கல்கத்தா.

[3] அமிர்தசாகரர், 1938,**யாப்பருங்கலக் காரிகையுரை**,(குமாரசுவாமிப்புலவர் உரை), யுனிஆட்ஸ் லிமிட்டெட், கொழும்பு.

[4] அரவிந்தன், வை, மு., 1977,**உரையாசிரியர்கள்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.